**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU**

| SESSIONS CASE No. | 134 | of | 2018 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 3 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | தாமோதரன் | வயது | | இனம் | |
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 13th day of November 2025

நாள் :- 13.11.2025 அ.சா. 3 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது தாம்பரம் மாநகராட்சியில் JCB Operator ஆக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தாம்பரம் நகராட்சி ஆணையராக இருந்தார். புகார்தாரர் இளங்கோ Sanitory Inspector ஆக இருந்தார். கணபதிபுரத்தில் ஏன் குப்பை எடுக்கவில்லை என்று எதிரி புகார்தாரரிடம் கேட்டார். அதற்கு இளங்கோ, அது என்னுடைய ஏரியா இல்லை, பழனிச்சாமி என்பவரின் ஏரியா என்று பதில் சொன்னார். அதற்கு எதிரி வாதியை பார்த்து நீ என்ன மயிரை பிடுங்கி கொண்டிருக்கிறாயா என்று கேட்டார். பறையனுக்கு பதவி கொடுத்தால் இப்படித்தான் செய்வீர்கள் என்று சொன்னார்.

**குறுக்கு விசாரணை**

நான் 38 ஆண்டுகளாக தாம்பரம் நகராட்சியில் வேலை பார்த்து வருகிறேன். எதிரி சந்தானம் சுமார் 2 ஆண்டுகள் தாம்பரம் நகராட்சி ஆணையராக இருந்தார். அவர் மிகவும் கண்டிப்பான அதிகாரி ஆவார். புகார்தாரர் இளங்கோ தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் பிறப்பு இறப்பு பிரிவில் வேலை செய்தபோது சரிவர பணிகளை செய்யவில்லை என்று கூறி எதிரி இடைநீக்கம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பிறப்பு இறப்பு பிரிவில் வேலை பார்த்தது உண்மை தான். எனக்கு 2 மகன்கள். என் மகன் கிருஷ்ணனுக்கு சரியாக காது கேட்காது. தஞ்சாவூரில் தான் என் மகனுக்கு சிகிச்சை பார்த்தேன். எதிரியின் ஓட்டுநர் மண்ணாதன் என்பவர் தான் என்னையும் என் மகனையும் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அழைத்து சென்றார். அவ்வாறு அலுவலகத்தை விட்டு வெளியே சென்றால் விடுப்பு எடுக்கவேண்டும் என்றால் சரிதான். நான் வெள்ளிக்கிழமை இரவு கிளம்பி சென்று சனிக்கிழமை சிகிச்சை பெற்று ஞாயிற்றுக்கிழமை திரும்பிவிட்டேன். நான் ஒரு வாரம் விடுப்பு எடுத்து தஞ்சாவூரில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் அப்போது தொழிலாளா் சங்க பொறுப்பில் இருந்தேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி சங்க உறுப்பினர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி

நேர்மையான அதிகாரி என்றும் அவரை பழிவாங்க வேண்டி வாதி புகார் கொடுத்துள்ளார் என்றும் அந்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :-**

இல்லை

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU

| SESSIONS CASE No. | 134 | of | 2018 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 4 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | ஜி.ராதாகிருஷ்ணன். | வயது | | இனம் | |
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 13th day of November 2025

நாள் :- 13.11.2025 அ.சா.4 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது தாம்பரம் நகராட்சியில் தூய்மை பணியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவா் தாம்பரம் நகராட்சி ஆணையராக வேலை பார்த்தார். புகார்தாரரை தெரியும். புகார்தாரர் இளங்கோ Sanitory Inspector ஆக இருந்தார். நான் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ விடுப்பில் இருந்தேன். விடுப்பு கடிதம் கொடுக்கவேண்டி ஆணையரை பார்க்க சென்றேன். நான் வரும்போது எதிரி வாதியை பார்த்து கணபதிபுரத்தில் குப்பை எடுக்க சொன்னேனே, எடுத்தாயிற்றா? என்று கேட்டார். அதற்கு வாதி அது தன் ஏரியா இல்லை என்றும், இன்னொருவர் ஏரியா என்றும் பதில் சொன்னார். இந்த பறையன்களுக்கு வேலை கொடுத்தால் இப்படி

தான் செய்வீர்கள் என்று எதிரி சொல்லிவிட்டு போய்விட்டார். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

**குறுக்கு விசாரணை**

என் வீடு தாம்பரம் சானிடோரியத்தில் உள்ளது. எனக்கு 4 பிள்ளைகள். சம்பவ காலத்தில் என் பிள்ளைகள் பள்ளியில் படித்து கொண்டிருந்தார்கள். அப்போது தாம்பரம் நகராட்சி அலுவலகத்தில் மட்டும் சுமார் 60 நபா்கள் வேலை பார்த்தார்கள். அப்போது எனக்கு மாத சம்பளம் வங்கி கணக்கில் வரவு வைப்பார்கள். நான் மருத்துவ விடுப்பு கடிதத்தை போலீசா் விசாரணையில் கொடுக்கவில்லை. அதன் நகலை இன்று கொண்டுவரவில்லை. என்னுடைய வங்கி பாஸ் புக்கை பார்த்தால் நான் மாத கணக்கில் விடுப்பில் இருந்தேனா அல்லது வேலை பார்த்தேனா என்பது தெரியவரும் என்றால் சரிதான். என் வீட்டிற்கு பக்கத்தில் எல்லையம்மன் கோவில் உள்ளது. அந்த கோவிலுக்கு பூஜாரி நான் தான் என்றால் சரியல்ல. என் பிள்ளைகள் பூஜை செய்வார்கள். நான் சும்மா சென்று அங்கே அமர்ந்திருப்பேன். இன்றைய தேதி வரையில் தாம்பரம் நகராட்சியில் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 2002 முதல் Long absence ல் இருக்கிறேன் என்றால் சரியல்ல. எல்லையம்மன் கோவில் பூஜாரி என்றும், தாம்பரம் நகராட்சியில் பணிக்கு செல்வேன் என்பது முற்றிலும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. 2002 அக்டோபர் மாதம் வாதியை ஆஜர் எதிரி இடைநீக்கம் செய்து வைத்திருந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு ஆஜர் எதிரி

இடை நீக்கத்தை ரத்து செய்தார் என்றால் சரிதான். ஒழுங்கீனமான பணியாளா்கள் மீது ஆஜர் எதிரி ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததால் அவர் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு வாதி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :-**

இல்லை

T CHANDRASEKARAN
Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu